


**06. 11. 2025**

தலைப்புச் செய்திகள்

1. பீஹார் மாநில சட்டப்பேரவைக்கு நடைபெறும் முதற்கட்ட வாக்குப்பதிவில் பகல் 1 மணி நிலவரப்படி 42.31 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

2. உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட Ikshak கப்பல் இந்திய கடற்படையில் இன்று பிற்பகல் இணைக்கப்படுகிறது.

3. சென்னையில் விளையாட்டிற்கான அறிவுசார் திறன்மேம்பாட்டு மையம் விரைவில் ஏற்படுத்தப்படும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் புதிய பாடதிட்டத்தை வகுக்க 13 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது என்று மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

5. குயின்ஸ்லாண்டில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 4ஆவது 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பீஹார்

பீஹார் மாநிலத்தில் 18 மாவட்டங்களின் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு விறுவிறுப்பாக தற்போது நடைபெற்று வருகிறது.

பகல் 1 மணி நிலவரப்படி 42.31 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை தொடர்ந்து நடைபெறும்.

பீஹார் முதலமைச்சர் திரு.நிதிஷ்குமார் பட்னா மாவட்டம் பக்தியார்பூரிலும்,

மகாகத்பந்தனின் முகேஷ் அஹானி தர்பங்காவிலும் வாக்குகளை செலுத்தினர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக சூரிய கர்கா சட்டப்பேரவை தொகுதியில் உள்ள 56 வாக்குச்சாவடிகள் மற்றும் ஏனைய சில வாக்குச்சாவடிகளில் ஒருமணி நேரத்திற்கு முன்னதாகவே வாக்குப்பதிவு நிறைவடைகிறது.

தகுதியுடைய வாக்காளர்கள் அனைவரும் தேர்தலில் வாக்களிக்க கேட்டுக்கொண்ட பிரதமர் திரு.நரேந்திரமோடி முதன்முறை வாக்காளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

பெண் வாக்காளர்களுக்கு தனி வாக்குப்பதிவு மையம்,

வாக்களித்த பின்னர் புகைப்படம் எடுத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே பீஹாரில் வரும் 11ஆம் தேதி 122 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெறும் இரண்டாவது இறுதிகட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

*************

வந்தேமாதரம்

நாட்டின் தேசிய பாடலான வந்தேமாதரம் இயற்றப்பட்டதன் 150ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் நாளை இப்பாடல் பாடும் நிகழ்வை தொடங்கிவைக்கிறார்.

மத்திய கலாச்சார அமைச்சகத்தின் சார்பில் 150 இடங்களில் வந்தேமாதரம் பாடலை பாடுவதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் நாளை தொடங்கி அடுத்த ஆண்டு நவம்பர் 7ஆம் தேதிவரை வந்தேமாதரம் பாடல் பாடும் நிகழ்வுகள் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வந்தே மாதரத்தின் 150ஆண்டு கால, வரலாற்றை சித்தரிக்கும் சிறப்பு கண்காட்சி நடைபெறுவதோடு, அதன் பெருமையை எடுத்துரைக்கும் ஆவண திரைப்படமும், நினைவு தபால் தலையும், நாணயமும் வெளியிடப்படுகிறது.

வந்தேமாதரம் பாடல் மூலம் சுதந்திர போராட்டம் உத்வேகம் பெற்றதோடு, தேச ஒருங்கிணைப்பிற்கு வழிகோலி, நம் நாட்டின் கவுரவமாக கடந்த 150 ஆண்டுகளாக வந்தே மாதரம் பாடல் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

தர்மபுரி கேந்திரிய வித்யாலயா பள்ளியில் தேசப்பற்றை வலியுறுத்தும் வகையில் வந்தேமாதரம் பாடல் நிகழ்வு இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

பபித்ரா மார்கரேட்டா

மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு. பபித்ரா மார்கரேட்டா தமது ஈக்வடார் நாட்டு பயணத்தின் ஒருபகுதியாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் கேப்ரியேலா சோமர் ஃபெல்டை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

வர்த்தகம், மருந்தியல், பயிற்சி, திறன்மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு வாய்ப்புகள் உள்ள துறைகளில் ஒத்துழைப்பு குறித்து இருவரும் விவாதித்தனர்.

இருநாடுகளில் பயிற்சி நிறுவனங்களின் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இரு அமைச்சர்களும் இணைந்து கையெழுத்திட்டதாக பபித்ரா தமது சமூகவலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஈக்வடார் தலைநகர் குவிட்டோவில் இந்திய தூதரகத்தை இரு அமைச்சர்களும் திறந்துவைத்தனர்.

அந்நாட்டு வர்த்தக சமூகத்தினருடன் கலந்துரையாடிய திரு.பபித்ரா, இருநாடுகளுக்கிடையே வணிக நடவடிக்கைகளை ஊக்கவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டார்.

*************

கப்பல்

கேரள மாநிலம் கொச்சி கடற்படை தளத்தில் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட Ikshak கப்பல் இந்திய கடற்படையில் இன்று பிற்பகல் இணைக்கப்படுகிறது.

கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி முன்னிலையில் இக்கண்காணிப்பு கப்பல் கடற்படையில் இணைகிறது.

Ikshak இணைப்பு மூலம் நீர்வள ஆய்வுதிறன்கள் மேம்படுவதோடு, தெற்கு கடற்படை தளத்தில் சேர்க்கப்படும் முதலாவது கண்காணிப்பு கப்பலாகும் இது.

நாட்டின் கப்பல் கட்டமைப்பில் தற்சார்பு நிலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக Ikshak திகழ்வதாகவும், துல்லியமான கண்காணிப்பு வழிகாட்டி கப்பலாக இது இருக்கும் என்றும், எதிர்பார்க்கப்படுகிறது.

கடலோர பாதுகாப்பு, துறைமுகங்களில் ஆழ்கடல் கண்காணிப்பு, கடல்வழி தடங்கள் ஆய்வு போன்றவற்றை மேற்கொள்ளும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு கட்டமைப்பு மேலும் வலுவடையும்.

*************

காவிரி மேலாண்மை ஆணையம்

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 45ஆவது கூட்டம் அதன் தலைவர் திரு.எஸ்.கே.ஹல்தர் தலைமையில் புதுதில்லியில் இன்று பிற்பகல் காணொலி மூலம் நடைபெறுகிறது.

தமிழகம் கர்நாடகம் கேரளம் புதுச்சேரியை சேர்ந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

*************

உதயநிதி

சென்னையில் அடுத்த 6 மாதங்களில் விளையாட்டிற்கான அறிவுசார் திறன் மேம்பாட்டு மையம் ஏற்படுத்தப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெறும் மூன்றுநாள் 17ஆவது விளையாட்டு மேம்பாட்டு மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், திருச்சி, கோவை, மதுரை, சேலம், திருநெல்வேலி மாவட்டங்களில் விளையாட்டு மையங்கள் உருவாக்கப்படும் என்றார்.

வர்த்தக பணிகள் மற்றும் இலகுவான வணிக நடவடிக்கைகளை ஊக்குவிக்க சிறப்பு பிரிவு ஒன்றும், மாநிலத்தில் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் 11.9 சதவிகிதம் என்ற இரட்டை இலக்கை எட்டியுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், கடந்த 3 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 800 ஸ்டார்ப் அப் நிறுவனங்கள் மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பிற நவீன தொழில்நுட்பங்களிலும் தமிழகம் சாதனை படைத்து வருவதாக அவர் எடுத்துரைத்தார்.

சென்னையில் நடைபெறும் விளையாட்டு மேம்பாட்டு மாநாடு சர்வதேச வாய்ப்புகளுக்கான திறவுகோலாக திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

150 அமர்வுகளில் விளையாட்டு வல்லுநர்கள் உரிய ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

விளையாட்டுத்துறையின் பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

*************

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் புதிய பாடதிட்டத்தை வகுக்க 13 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது என மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், போட்டித்தேர்விற்கு தயார் செய்வது, அறிவியல் தொழில்நுட்ப அறிவு மேம்பாடு உள்ளிட்டவற்றை மையபடுத்தி இப்புதிய பாடதிட்டம் உருவாக்கப்படும் என்றார்.

மாநிலத்தில் புதிதாக 13 பள்ளிகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், வரும் கல்வியாண்டு முதல் இப்பள்ளிகளில் மாணாக்கர் சேர்க்கை தொடங்கும் என்று கூறினார்.

பள்ளிகளின் நுழைவாயிலில் சி.சி.டி.வி. கேமராக்கள் அமைக்க விரைவில் டெண்டர் விடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

*************

சேகர்பாபு

சென்னை கொளத்தூர் தொகுதியில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைவரும் அமைச்சருமான திரு.சேகர்பாபு இன்று ஆய்வு செய்தார்.

கபாலீஸ்வரர் கலை அறிவியல் கல்லூரி,

மூத்த குடிமக்களுக்கான உறைவிட கட்டுமான பணிகள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இக்கலை அறிவியல் கல்லூரி, அடுத்த ஆண்டு பயன்பாட்டிற்கு வரும் என்றார்.

*************

ஆர்பாட்டம்

கோவையில் கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமையை கண்டித்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பிஜேபி மகளிர் அணி சார்பில் ஆர்பாட்டங்கள் இன்று நடைபெற்றன.

தூத்துக்குடியில் சிதம்பரம் பேருந்து நிறுத்தம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்தில் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்தில் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்தி பெண்கள் கோஷமிட்டனர்.

நாமக்கல், மயிலாடுதுறை, வேலூர், விருதுநகர், கன்னியாகுமரி, ராணிப்பேட்டை, மாவட்டங்களிலும் பிஜேபி மகளிர் அணியினர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

*************

வெட்டிவேர்

நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களுக்கு மாற்றாக வெட்டிவேர் சாகுபடி நல்ல லாபம் தருவதாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

சிறுத்தை புலி

உதகை - மசினகுடி பகுதியில் சிறுத்தை புலி நடமாட்டம் காணப்படுவதால் வாகன ஓட்டிகள் எச்சரிக்கையுடன் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது நீலகிரி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

*************

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, திருச்சி மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*************

கிரிக்கெட்

குயின்ஸ்லாண்டில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 4ஆவது 20-20 கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 2 ஓவரில், விக்கெட் இழப்பின்றி, 12 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

*************

டென்னிஸ்

ஜப்பான் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், நெதர்லாந்தின் மிக் இணை முன்னேறியது.

இன்று நடைபெற்ற காலிறுதியில் ஜீவன் இணை –ஜப்பான், தாய்லாந்து இணையை 6-3 6-4 என்ற நேர் செட்களில் வென்றது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது